# உங்களில் ஒருவன் - உங்களோடு ஒருவன்!

## நேற்றைய தொடர்ச்சி

தன் தாய் தந்தையரின் திருமணம் எந்தச் சூழ்நிலையில் நடந்தது என்பதை ஒரு மகனாக ஸ்டாலின் எழுதியிருக்கிறார். இந்தி எதிர்ப்பு ஊர்வலத்திற்குப் போய் வந்தவுடன்தான் கலைஞர் திருமணம் செய்துகொண்டிருக்கிறார். கொள்கைப் பிடிவாதக்காரருக்கு, கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாதவருக்கு, எழுத்தாளருக்கு, போராட்டக்காரருக்கு மனைவியாக இருப்பதும், மகனாக இருப்பதும் எளிய காரியமல்ல.

'உங்களில் ஒருவன்' நூலில், நாம் இதுவரை அறிந்திராத பல முக்கிய விஷயங்களை ஸ்டாலின் பதிவு செய்துள்ளார். காவல் துறையினர் ஒருவரைக் கைது செய்தால், குடும்பத்தினர் அழுது ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஆனால், கலைஞரின் குடும்பத்தினர் சர்வசாதாரணமாக 'கைது பண்ணிட்டுப் போயிட்டாங்க' (பக்.107) என்று சொல்கிறார்கள். பிள்ளைகள், "கலைஞரைக் கைது செய்து சிறைக்கு அழைத்துக் கொண்டு போகும்போது வெளியூர் போயிருப்பதாகவே நாங்கள் நினைத்தோம்" (பக்.110) என்று எழுதியிருப்பது நிஜம். கலைஞர் ஒரே ஒரு முறை சிறை சென்றிருந்தால் அதிர்ச்சியாக இருக்கும். கட்சிப் பணிக்காக, பொதுக் கூட்டம் பேசுவதற்காகப் போவது போல் அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்றவர்தானே, சுற்றுப் பயணத்திற்குப் போவதுபோல்தான் கலைஞர் சிறைக்குச் சென்றிருக்கிறார்.

"கலைஞர் குடும்பத்துக்கு வீடு என்பது சிறையும் சேர்ந்துதான் என்பதை சிறுவனாக இருந்தபோதே நான் உணர்ந்திருந்தேன். அதனால்தான் ஓராண்டு சிறை என்னை உருக்குலைக்காமல் உரமாக்கியது" (பக் 34) என்றும், "சிறை வாழ்க்கை எங்களுக்குக் குடும்ப வாழ்க்கையோடு சேர்ந்த ஒன்றாகத்தான் இருந்தது" என்றும் எழுதியிருப்பதைப் படிக்கும்போது கலைஞரின் குடும்பத்தைத் தவிர வேறு ஒரு குடும்பம், தமிழ்நாட்டில், இந்தியாவில், உலக அளவில்கூட இருக்குமா என்ற கேள்வி எழுகிறது. கலைஞர் பின்பற்றிய கொள்கையில், அவரது குடும்பத்தினரும் முழு ஈடுபாடு காட்டியிருக்கின்றனர். இல்லையென்றால் 'சிறை வாழ்க்கையும் எங்கள் குடும்ப வாழ்க்கையின் ஒரு பகுதிதான்' என்று எழுத முடியாது.


"எனது அரசியல் வாழ்வின் தொடக்கம் கோபாலபுரம் முடி திருத்தும் நிலையத்தில்தான் தொடங்கியது" (பக்.115) என்று ஸ்டாலின் எழுதியிருந்தாலும் நான்கரை மாதக் கைக்குழந்தையாக, தந்தையைக் காண திருச்சி மத்தியச் சிறைச்சாலைக்குச் சென்ற நாள் அன்றே அவரது அரசியல் பயணம் தொடங்கிவிட்டது என நான் கருதுகிறேன். அந்த அரசியல் பயணம் ராஜ பாட்டையாக ஒருநாளும், ஒருபோதும் இருந்ததில்லை. பள்ளம், மேடு நிறைந்ததாகத்தான் இருந்திருக்கிறது. கரடுமுரடான பாதையாகத்தான் இருந்திருக்கிறது. கலைஞரின் மகன் என்பதற்காகச் சலுகைகள் ஏதும் பெற்றாரா? பெற்றிருப்பார் என்றுதான் பொதுச் சமூகம் நினைத்திருக்கும். ஸ்டாலின் சலுகைகளைப் பெறாமல் சங்கடங்களைத்தான் அதிகமாகச் சந்தித்திருக்கிறார் என்பதுதான் நிஜம். 'தலைவர் மகன் என்பதால் சலுகைகள் பெற்றிருப்பேன் என்றுதான் பலரும் நினைப்பார்கள். ஆனால் தலைவரின் மகன் என்பதால் நான் அதிகம் சங்கடங்களைத்தான் சந்தித்தேன்' (பக். 238) என்று அவர் எழுதியிருக்கிறார்.

தி.மு.க. ஒரு ஜனநாயகக் கட்சி. இந்தியாவில் உள்கட்சித் தேர்தலை முறையாக நடத்துகிற ஒரே கட்சி தி.மு.க.தான். கட்சித் தலைவரின் மகன் என்பதற்காக ஸ்டாலின் நேரடியாகக் கட்சியின் எந்தப் பதவிக்கும், பொறுப்புக்கும் நியமிக்கப்பட்டதில்லை. கிளைக் கழகப் பிரதிநிதி பதவிக்கே கூட அவர் போட்டியிட்டுத்தான் வென்றிருக்கிறார். ஆயிரம் விளக்கு 57ஆவது வார்டு தேர்தலிலும் போட்டியிட்டுத்தான் வெற்றி பெற்றார். கிளைக் கழகப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்டப் பிரதிநிதி என்று ஒவ்வொரு பதவியையும் போட்டியிட்டுத்தான் வென்றிருக்கிறார்; கட்சியின் அடிமட்டத்திலிருந்து உழைப்பின் மூலமே ஒவ்வொரு பதவிக்கும் வந்திருக்கிறார் என்பதை 'உங்களில் ஒருவன்' நூலைப் படிக்கிற அனைவரும் அறிந்துகொள்வார்கள். முட்டிமோதி, போராடி, தானாக வளர்ந்துவரட்டும் என்றுதான் கலைஞரும் விட்டிருக்கிறார்.

உழைக்காமல் ஒருவரும் தி.மு.க.வில் சாதாரணப் பதவிக்குக் கூட வர முடியாது என்பதுதான் வரலாறு. ஸ்டாலின் கட்சியில் உழைத்ததற்குத்தான் அவருக்குக் கட்சிப் பதவி கிடைத்திருக்கிறது. கலைஞரின் மகன் என்பதற்காக அல்ல. கட்சிப் பதவி என்பது வெறும் பதவியல்ல; அது தலைமைப் பண்பு. தன்னுடன் உள்ளவர்களை, தனக்கு அடுத்த படிநிலையில் இருப்பவர்களையும் அரவணைத்துச்செல்வது. இந்தப் பண்பு ஸ்டாலினுக்கு இயல்பிலேயே இருந்திருக்கிறது. தனது உழைப்பாலும், எல்லாரையும் அரவணைக்கும் குணத்தாலும், சகிப்புத்தன்மையாலும் கட்சியின் அடிமட்டத்திலிருந்து படிப்படியாக மேலேறி வந்தவர். திடீரென அவர் எந்தப் பதவிக்கும் வந்துவிடவில்லை என்பதுதான் 'உங்களில் ஒருவன்' வாசகர்களுக்குத் தரும் முக்கியமான செய்தி. கட்சிப் பதவிக்கு வருவது ஒருவிதத்தில் எளிதாக இருக்கலாம். ஆனால், அதைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதுதான் மாபெரும் சவால். அந்தச் சவாலிலும் ஸ்டாலின் வெற்றி பெற்றிருக்கிறார். அவரது உழைப்பு, அரவணைக்கும் போக்கு, சகிப்புத்தன்மையும்தான் அதற்குக் காரணம்.

கட்சிக்காரர்கள் வார்டு கவுன்சிலர் தேர்தலில் போட்டியிட்ட போது சிறு வயதிலேயே பிரச்சாரம் செய்திருக்கிறார். 1967இல் சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட கலைஞருக்காகப் பிரச்சாரம் செய்திருக்கிறார். மெகா போனில் 'உங்கள் சின்னம் உதய சூரியன். நமது சின்னம் உதய சூரியன். உங்களை நாடி, உங்களைத் தேடி இதோ கலைஞர் வந்துகொண்டிருக்கிறார்' (பக். 120) என்று பிரச்சாரம் செய்தவர்தான் ஸ்டாலின்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. உருவாக்கியது யார்? 1969இல் அண்ணாவின் மணிவிழாவைக் கொண்டாட கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பின் முயற்சிகளை மேற்கொண்டது யார்? ஸ்டாலின்தானே. விழாவிற்கு வர இயலாது என்று அண்ணா சொல்ல, வந்தே தீர வேண்டும் என்று அடம்பிடித்ததும் ஸ்டாலின்தான். "உன் அப்பனைப் போலவே பிடிவாதக்காரனாக இருக்கிறாயே" (பக். 129) என்று அண்ணா சொன்னதோடு, விழாவிற்கு




வருவதற்கும் சம்மதிக்கிறார். அண்ணாவிடம் அடம்பிடித்து அனுமதி வாங்கும்போது ஸ்டாலினுக்கு வயது 16தான். ஆனால் அண்ணாவால் மணிவிழாவிற்கு வர முடியாமல் போகிறது. மறைந்துவிடுகிறார். மணிவிழாவை நடத்த முடியவில்லையே என்று வருத்தப்பட்ட ஸ்டாலின் 1970இல் அண்ணாவின் பிறந்தநாளை மூன்று மாநில முதலமைச்சர்களைக் கொண்டு கொண்டாடுகிறார். அந்த விழாவைப் பற்றி "எனது வாழ்க்கையில் மிகப் பெரிய நிகழ்ச்சியாக நான் ஏற்பாடு செய்தது" (பக்.14) என்று எழுதியிருக்கிறார். 1972இல் நடைபெற்ற காஞ்சி மாநாட்டிற்காக அண்ணா நினைவிடத்திலிருந்து மாநாட்டு பந்தல்வரை நினைவுச் சுடரை ஏந்திக்கொண்டு தொடர் ஓட்டமாக ஓடியவர்தான் ஸ்டாலின். அண்ணாவின் மீது அவருக்குத் தனித்த பாசம் உண்டு. அதனால்தான் 'அண்ணா என்றொரு அன்பு உயிர்' என்று எழுதியிருக்கிறார்.

**தன்வரலாற்று நூலில் ஸ்டாலின் யார் மீதும் புகார் கூறவில்லை. யார் மீதும் குற்றம் சாட்டவில்லை. யாரையும் குறை சொல்லவில்லை. பிறர் மீது வன்மத்தை வெளிப்படுத்தும் விதமாக ஒரு சொல்கூட இல்லை. தன்னிரக்கமோ, கழிவிரக்கமோ வெளிப்படவில்லை. இந்தப் பண்புதான் இந்த நூலின் சிறப்பு. " 'மக்களிடம் செல். மக்களோடு இரு' என்று அண்ணா சொன்னதைத் தான் என்னுடைய வாழ்க்கை நெறியாகப் பின்பற்றிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். அவரைக் கூர்ந்து கவனித்தவர்களுக்குத் தெரியும், அண்ணா சொன்னதைத்தான் ஸ்டாலின் இன்றுவரை முழுமையாகப் பின்பற்றி வருகிறார் என்பது.**

இராயப்பேட்டை காவல் நிலையத்திற்கு அருகிலிருந்த அமின் கேப் உணவகத்தின் சமோசாவும் தேநீரும் அண்ணவுக்குப் பிடிக்கும் என்பதால், அண்ணா கோபாலபுரம் வீட்டிற்கு வரும்போதெல்லாம் தானாகவே சைக்கிளில் சென்று அவற்றை வாங்கிவந்து கொடுத்தவர் ஸ்டாலின் (பக்.125). அண்ணாவின் முன் பலமுறை மனோகரா நாடகத்தை நடத்திக்காட்டியவர்.

மனச்சோர்வு ஏற்படும்போதெல்லாம் தன்னுடைய வீட்டிற்கு வரவழைத்து மனோகரா நாடகத்தை நடித்துக்காட்டு என்று அண்ணா சொன்னது ஸ்டாலினிடம்தான். கலைஞரிடம் மட்டுமே அவர் சற்று விலகியிருந்திருக்கிறார். ஆனால் அண்ணாவிடம், எம்.ஜி.ஆரிடம், சிவாஜி கணேசனிடமும், தி.மு.க.வின் இரண்டாம் கட்டத் தலைவர்களுடனும் நெருக்கமாகத் தான் இருந்துள்ளார். எம்.ஜி.ஆர். நடித்த படங்களைப் பார்த்துவிட்டு, எம்.ஜி. ஆரிடமே கருத்துக் கூறுகிற அளவுக்கு, எம்.ஜி.ஆரே தான் நடித்தப் படத்தைப் பற்றி ஸ்டாலினிடம் கருத்துக் கேட்கிற அளவுக்கு இருவருக்குமிடையில் அன்பு இருந்திருக்கிறது. ஒருமுறை எம்.ஜி.ஆரிடம் போனில், "சார்" என்று சொல்ல, "என்னை எப்படி சார் என்று நீ சொல்லலாம்" என்று கேட்டு உரிமையுடன் ஸ்டாலினிடம் கோபித்துக்கொண்டிருக்கிறார். கலைஞரிடமும் புகார் சொல்லியிருக்கிறார். இப்படிப் பல புதுப்புது விஷயங்கள் 'உங்களில் ஒருவன்' நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

**1971இல் நடைபெற்ற தேர்தலின்போது கலைஞர் எழுதிய 'நானே அறிவாளி' என்ற நாடகத்திலும் முரசொலி அடியார் எழுதிய 'முரசே முழங்கு' என்ற நாடகத்திலும் நடித்திருக்கிறார். இந்த நாடகம் தமிழ்நாடு முழுவதும் நிகழ்த்தப்படுகிறது. ஸ்டாலின்தான் நடிக்கிறார். 28.3. 1971இல் சென்னையில் நாற்பதாவது முறையாக நாடகம் நடக்கிறது. பார்வையாளராக எம்.ஜி.ஆர். வந்திருக்கிறார். நாற்காலியில் அமரச் சொல்லியும், பிறருக்கு மறைக்கும் என்று சொல்லி தரையில் அமர்ந்து, நாடகத்தைப் பார்த்துவிட்டு பாராட்டுகிறார். செங்கல்பட்டில் நாடகத்தை நிகழ்த்துவதற்காக செங்கல் லாரியில் ஆர்.எஸ். பாரதியுடன் சென்றதையும் எழுதியிருக்கிறார். 54 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அப்போதே ஸ்டாலினுக்குத் தெரிந்திருக்கிறது 'உழைப்புதான் தனக்கு மூலதனம். உழைப்பவர்களே உயர முடியும். கற்பனை பேச்சுகள் எடுபடாது' என்பது.**

1971இல் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது தான் மட்டும் உழைக்கவில்லை. தி.மு.க.வின் வெற்றிக்காகப் பலரும் உழைத்தார்கள் என்பதை மறக்காமல் எழுதியிருக்கிறார். இந்த நூலின் மிகச் சிறந்த பகுதி என்று இதைத்தான் நான் குறிப்பிடுவேன்.

முரசொலி அடியார் எழுதிய 'அண்ணா ஒரு காவியம்', கலைஞர் எழுதிய 'திரீ தியாகி', 'இதயத்தில் அண்ணா', கலாராணி ஜானகி குழுவினர் நடத்தியது. கவிஞர் முத்துலிங்கம் எழுதிய 'பேசும் சிலைகள்', கலைவாணர் கலைக்குழு நடத்திய 'சிண்டிகேட் சூரசம்ஹாரம்', என்.எஸ். கோலப்பன் நடத்திய 'தொடரட்டும் கலைஞர் ஆட்சி', டி.என். பாலு குழுவினர் நடத்திய 'அரசியல் கோமாளி', 'அம்மாஞ்சி ராஜா'. சொர்ணம் எழுதிய 'இதோ ஒரு கோட்சே', பாண்டியன் எழுதிய 'முகமது கஜனி' என்று நீண்டதொரு பட்டியலைத் தந்திருக்கிறார். இந்த நாடகப் பட்டியல் 'உங்களில் ஒருவன்' நூலுக்குக் கூடுதல் வலுவைக் கூட்டுகிறது. ஸ்டாலின் நினைத்திருந்தால் நான் மட்டுமே நாடகம் நடித்தேன், நான் மட்டுமே தி.மு.க.வின் வெற்றிக்கு உழைத்தேன் என்று எழுதியிருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. உழைத்தாலும், கஷ்டப்பட்டாலும், அதை வெளியே சொல்லாத ரகம் ஸ்டாலின்.

1971இல் யாரெல்லாம் தி.மு.க. வின் வெற்றிக்காக உழைத்தார்களோ அவர்களுக்கெல்லாம் தன் எழுத்தின் மூலம் பெருமை சேர்த்திருக்கிறார். வரலாற்றில் இடம்பெறச் செய்திருக்கிறார். தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதினாலும் அதில் தனக்கான இடத்தைக் குறைத்துக்கொண்டு மற்றவர்களுக்குக் கூடுதலான இடத்தைத் தந்திருப்பது அவருடைய மேன்மையான பண்பைக் காட்டுகிறது. அதனால்தான் மற்றவர்கள் எழுதிய தன்வர லாற்றுக் கதைகளிலிருந்து மாறுபட்டு நிற்கிறது. இதனால்தான் 'உங்களில் ஒருவன்' நூல் ஸ்டாலினுடைய வாழ்க்கை வரலாறு அல்ல. தி.மு.க.வின் வரலாறு என்று சொல்ல முடிகிறது.

**ஸ்டாலினுடைய உழைப்பைக் கட்சியில் மட்டுமல்ல, முரசொலி பத்திரிகையிலும் பார்க்க முடியும். 'எனக்குக் கலைஞரைப் போல எழுத வராது' என்று சொன்னாலும் முரசொலியில் அவர், 'தினபலன்' என்ற பகுதியை எழுதியிருக்கிறார். 'தினபலன்' என்பது ஜோசியம் சார்ந்தது அல்ல. அன்றாட அரசியல் நடப்பு கள் சார்ந்தது. கடைமட்ட ஊழியனாகவும் முரசொலியில் வேலைபார்த்திருக்கிறார். முரசொலி நாளிதழை அஞ்சலில் சேர்ப்பதற்காக அவர் பட்ட சிரமங்களையெல்லாம் எழுதியிருக்கிறார். "என்னுடைய முதல் குழந்தை முரசொலி தான்" என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். எழுதியிருக்கிறார். கலைஞருடைய முதல் குழந்தையை அவர் மட்டுமே வளர்த்தெடுக்கவில்லை, அவருடைய மொத்த குடும்பமே வளர்த்தெடுத்து இருக்கிறது. கலைஞருடைய கொள்கையை, எழுத்துகளை கட்சிக்காரர்களிடமும், பொது மக்களிடமும் கொண்டு போய்ச் சேர்ப்பதில் ஸ்டாலினுக்குப் பெரும் பங்கு இருந்திருக்கிறது.**

கலைஞர் மட்டும்தான் நாடகத் துறையோடு, சினிமாத் துறையோடு, இலக்கியத் துறையோடு தொடர்பு கொண்டிருந்தார் என்று சொல்ல முடியாது. மு.க. முத்து, சிறந்த நடிகராக இருந்திருக்கிறார். கலைஞர் எழுதிய திரைக்கதை வசனத்தில் வெளிவந்த 'ஒரே ரத்தம்' சினிமாவில் ஸ்டாலின் நடித்திருக்கிறார். 'முரசே முழங்கு' நாடகத்தில் 40 ஊர்களில் நடித்திருக்கிறார். கலைஞர் எழுதிய 'நானே அறிவாளி' என்ற நாடகத்திலும்

எழுத்தாளர்
**இமையம்**



நடித்திருக்கிறார். 'வெற்றி நமதே', 'திண்டுக்கல் தீர்ப்பு' நாடகங்களிலும், 'குறிஞ்சிமலர்' என்ற தொடரிலும் நடித்திருக்கிறார். 'அஞ்சுகம் பிக்சர்ஸ்' என்ற சினிமா தயாரிப்பு நிறுவனத்தையும் நடத்தியிருக்கிறார். ஸ்டாலின் மட்டுமல்ல, அவருடைய மகன் உதய நிதியும்கூட பல திரைப்படங்களில் நடித்தவர்தான். முரசொலி மாறன், நல்ல சிறுகதை எழுத்தாளர், கட்டுரை ஆசிரியர். முரசொலி செல்வமும் எழுத்தாளர்தான். கலைஞரின் குடும்பம், கலைத் துறையோடு, எழுத்துத் துறையோடு, பத்திரிகைத் துறையோடு தொடர்புடையதுதான்.

நாடக நடிகர், சினிமா நடிகர், தொடர் நடிகர், பத்திரிகையில் வேலை பார்த்தவர், கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.வை ஆரம்பித்தவர், தி.மு.க. இளைஞர் அணியை வளர்த்தெடுத்தவர், சட்டமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி மேயர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர், தி.மு.க.வின் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், பத்தி எழுத்தாளர், தன்வரலாற்று நூலாசிரியர் என்று பல முகங்களைக் கொண்டவர் மு.க.ஸ்டாலின். அவருடைய ஒவ்வொரு முகம் குறித்தும், ஒவ்வொரு நூல் எழுத முடியும். அந்தளவுக்கு அவர் ஒவ்வொரு துறைக்கும் தன்னுடைய பங்களிப்பைச் செய்திருக்கிறார். 'உங்களில் ஒருவன்' (2022) பாகம் ஒன்று நூலை எழுதியதால் நூற்றாண்டு கண்ட திராவிட இயக்க எழுத்தாளரின் வரிசையில் இடம்பெற்றுவிட்டார். இப்போது மு.க.ஸ்டாலினும் எழுத்தாளர்தான், திராவிட இயக்க எழுத்தாளர். எல்லாப் பதவிகளை விடவும் பெரிய பதவி.

'உங்களில் ஒருவன்' தன்வரலாற்றுக் கதை நூலில் தன்னுடைய திருமணம் எப்படி நடந்தது என்பது பற்றியும் எழுதியிருக்கிறார். 20.7.1975இல் நடைபெற்ற ஸ்டாலின் - துர்கா தேவி திருமண அழைப்பிதழை கலைஞர் தன்னுடைய கையாலேயே எழுதியிருக்கிறார். காமராஜர், நாவலர் நெடுஞ்செழியன், ம.பொ.சி., இரா. செழியன் மட்டுமல்ல, வி.வி.கிரி, நீலம் சஞ்சீவி ரெட்டி, கே.கே.ஷா, ஜெகஜீவன் ராம், மணியம்மையார் என்று பலரும் கலந்துகொண்டனர்.

அகில இந்திய மாநாடுபோல் நடைபெற்ற திருமண விழாவில் வாழ்த்திப் பேசிய வி.வி.கிரி, "தந்தையைப் போலவே ஸ்டாலினும் நாட்டுக்கு நல்ல தொண்டாற்ற வேண்டும்" (பக்.273) என்று கூறி வாழ்த்தியிருக்கிறார். வி.வி.கிரி கூறியது போல்தான் இன்று மக்கள் தொண்டாற்றிக்கொண்டிருக்கிறார். "நீ உன் பொதுநலப் பணியில் வெல்க, வெல்கவென்று" (பக். 147) இளமுருகு பொற்செல்வி வாழ்த்தினார். அவருடைய வாழ்த்தும் நிஜமாகியிருக்கிறது.

இந்திரா காந்தியால் கொண்டுவரப்பட்ட அவசர நிலை பிரகடனத்தை எதிர்த்த ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். கடைசிவரை எதிர்த்து நின்றவர் தமிழ்நாட்டின் முதலமைச்சரும், தி.மு.க.வின் தலைவருமான கலைஞர்தான். வடநாட்டு அரசியல் தலைவர்கள் எல்லாம் தஞ்சம் கேட்டு கலைஞரிடம்தான் வந்தார்கள். அப்போது சுதந்திரக் காற்று வீசியது என்றால் அது தமிழ்நாட்டில் மட்டும்தான். ஆட்சிப் போய்விடும் என்ற நிலையிலும் கைது செய்யப்படலாம் என்ற நிலையிலும் கலைஞரும், தி.மு.க.வினரும், எமர்ஜென்ஸியைக் கடுமையாக எதிர்த்தார்கள். ஜனநாயகத்தைக் காக்கவும் எதேச்சதிகாரத்தை முறியடிக்கவும் போராடினார்கள்;. அந்தப் போராட்டத்தைக் கண்டு இந்தியா அதிசயித்து நின்றது. தி.மு.க.வின் ஆட்சி கலைக்கப்பட்டது. கலைஞரையும் தி.மு.க.வினரையும் பழிவாங்கத் துடித்தார் இந்திரா காந்தி.

கலைஞரைக் கைது செய்தால் தமிழ்நாடு கொந்தளித்துவிடும் என்ற அச்சத்தில், 1.2.1976இல் ஸ்டாலினை 'மிசா' சட்டத்தில் அதாவது 'ஆள் தூக்கி' சட்டத்தில் கைது செய்ய காவல் துறையினர் வந்தபோது கொஞ்சம்கூட கலங்காமல், அச்சப்படாமல், "இதோ ஸ்டாலின் இருக்கிறான். அழைத்துக்கொண்டு செல்லுங்கள்" (பக். 326) என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். ஸ்டாலினைக் கைது செய்து சென்னை மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். என்ன வழக்கு, எத்தனை நாள் சிறை, ஜாமினில் வெளியே வர முடியுமா, முடியாதா, திரும்பி வெளியே வருவோமா, வர முடியாதா? என்ன நடக்கப்போகிறது? என்ற எந்தக் கேள்விக்கும் விடை தெரியாமல் போகிறார் ஸ்டாலின். 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பதால் எனது தண்டனைக் காலம் எவ்வளவு என்பது குறித்து எதுவுமே தெரியாத நிலையில் சிறைச்சாலை நோக்கிப் பயணமானேன்.' (பக். 333) என்று எழுதியிருக்கிறார். சென்னை மத்தியச் சிறைச்சாலையின் வாசலில், உள்ளே போவதற்காகக் காத்திருக்கிறார். அந்நிலையோடு 'உங்களில் ஒருவன்' தன்வரலாறு பாகம் ஒன்று முடிகிறது. முதல் பாகத்தின் கடைசி வரியாக இருப்பது "சிறைக்குள் உங்களையும் அழைத்துச் செல்கிறேன். இதோ சிறை வாசலில் நான் காத்திருக்கிறேன். நீங்களும் காத்தி ருங்கள்" (பக்.334) என்பதுதான்.

1.2.1976 முதல் 23.1.1977இல் வரை மிசா கைதியாகச் சிறைச்சாலைக்குள் என்ன நடந்தது? சிறை வாழ்க்கையின் கொடூரங்கள் எப்படி இருந்திருக்கும்?

'உங்களில் ஒருவன்' என்ற இந்நூலில் ஸ்டாலினுடைய தனிப்பட்ட வாழ்க்கைக் கதையைவிட, தி.மு.க. நடத்திய போராட்டங்கள், தி.மு.க. சந்தித்த வெற்றித் தோல்விகள், நெருக்கடிகள், கலை இலக்கியத் துறையில் தி.மு.க.வினரின் பங்களிப்பு, தி.மு.க.வுக்குப் பலர் இழைத்த துரோகங்கள் என்று பல வரலாற்று சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

'அவரும் நானும்' பாகம் ஒன்றும், இரண்டும், ஸ்டாலின், துர்கா ஸ்டாலின் என்பவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைக் கதை என்பதைவிடவும், அதுவும் ஸ்டாலின் வாழ்க்கைக் கதையோடு தி.மு.க.வின் வரலாற்றைத்தான் பேசியிருக்கிறது.

உலகத்தில் ஒரே குடும்பத்தில் மூன்று பேர் தன்வரலாற்றை எழுதியவர்கள் என்றால் கலைஞர், ஸ்டாலின், துர்கா ஸ்டாலினைத்தான் குறிப்பிட முடியும். இது உலக அளவில் நிகழ்ந்த அதிசயம். திராவிட இயக்க எழுத்தாளர்கள் என்ற நீண்ட பட்டியலில் ஸ்டாலின் மட்டுமல்ல, இப்போது துர்கா ஸ்டாலினும் இடம்பெற்றுள்ளார்.

நாவல், சிறுகதை, நாடகம், கவிதை எழுதுவதைக் காட்டிலும் ஒரு எழுத்தாளனுக்கு மிகவும் முக்கியமானது 'தான் வாழும் சமூக வரலாற்றை எழுதுவது'. சமூக வரலாற்றைத்தான் ஸ்டாலின் எழுதியிருக்கிறார். மிகையில்லாமல் ஜோடனையில்லாமல், பொய்க் கலப்பில்லாமல், உண்மையை எழுதியிருக்கிறார். திராவிட இயக்க எழுத்தாளர்கள் மீது பிற எழுத்தாளர்கள் வைக்கும் குற்றச்சாட்டு, 'அலங்காரமான மேடைப் பேச்சு' என்பது. அந்த மாதிரியான குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் ஸ்டாலினின் நூலில் இடமில்லை. எளிய தமிழில் எழுதியிருக்கிறார். குழப்பமில்லாத வாக்கியங்கள். கவிதைக் குணம் கொண்ட வாக்கியங்களுமில்லை. யாருடைய சாயலுமில்லாத எழுத்து.

இது ஸ்டாலினுக்கான எழுத்து. மொழி. 'ராஜாஜி' என்று எழுதாமல் 'இராஜாஜி' என்றுதான் எழுதியி ருக்கிறார். மொழியில் மிகுந்த கவனம் கொண்டிருக்கிறார். "சிறைக்காற்று என்னை நோக்கி வீசத் தொடங்கியது", "கோபாலபுரம் வீடு மெல்ல என் பார்வையிலிருந்து மறைந்தது" என்ற வாக்கியங்கள் நவீனக் கவிஞர்கள் எழுதுவதுபோல இருக்கின்றன. வாழ்க்கையை எழுதுவதினூடே வரலாற்றை எழுதுதல். உண்மை, அதன் உண்மைத் தன்மையில் ஒளிரும், மிளிரும் என்பதற்கு 'உங்களில் ஒருவன்' மிகச் சிறந்த சான்று.

**அரசியலில் மிகவும் முக்கியமானது கட்சிக்காரர்களிடமிருந்து, பொது மக்களிடமிருந்து நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெறுவது. தன்னுடைய பலத்தையும் பலவீனத்தையும் சரியாக மதிப்பிடத் தெரிந்தவர்தான் பொது வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். தன் மீது வீசப்படும் அவதூறுகளைப் புறந்தள்ளி, தன்னுடைய லட்சியத்தின் பாதையில் யார் தொடர்ந்து பயணம் செய்கிறார்களோ அவர்கள்தான் மக்கள் மனதில் தலைவராக இருக்க முடியும் என்பதை நிரூபித்திருக்கிற ஸ்டாலினின் வாழ்க்கையில் 23 வயதிற்குப் பின் என்ன நடந்தது என்பதை அறிய வேண்டியிருக்கிறது. அதற்காக 'உங்களில் ஒருவன்' நூலின் பாகம் இரண்டிற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஸ்டாலினுடைய வாழ்க்கையின் வழியே, எழுத்தின் வழியே தி.மு.க.வின் வரலாற்றை மட்டுமல்ல, தமிழ்நாட்டின், இந்திய நாட்டின் அரசியல் வரலாற்றை அறிய காத்திருப்போம்.**

**வரலாற்றைத் திரித்து எழுதுபவர்கள் உண்டு. மறைத்து எழுதுகிறவர்கள் உண்டு. ஸ்டாலின் உண்மையை எழுதியிருக்கிறார். சமூகம் அறிய வேண்டிய உண்மை. அதனால்தான் இந்த நூல் மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது. தனித்த தன்வரலாற்று நூலாக இருக்கிறது. இறந்த காலம் உயிர்பெற்று எழுகிறது.**

**நேற்றைய வரலாற்றிலிருந்துதான் இன்றைய, நாளைய வரலாறு தீர்மானிக்கப்படுகிறது. வரலாற்றுடன் உரையாடுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார் ஸ்டாலின்.**